சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No.OS. 83/2024 - PW1

**2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை**

வாதித்தரப்பு சாட்சியாகிய வா.சா.1 இன் வாக்குமூலம் ஆக்ட் 10/1873 ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.R.இளவரசி, எழுத்தர் நிலை-II என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவராஜ் | தொழில் | பெயிண்டிங் வேலை |
| க/பெயர் | ராமன் | ஜாதி | |
| கிராமம் | ஏதப்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | செஞ்சி | வயது | 38 |

**10.09.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றி முழு விவரம் எனக்கு தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 10.04.2022 ம் தேதியிட்ட ரூ.7,50,000/-க்கான கடனுறுதிசீட்டு அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 15.03.2024 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.